## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date : 24.01.2023 | DW1 |
|---|---|---|
| Name: இந்திரஜித் | த/பெ.பெருமாள் கவுண்டர் | |
| Evidence Recorded Time: 04.01 P.M. to 05.00 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

வாதி குடும்பத்தில் பிரித்துக்கொண்ட பாகப்பிரிவியின் படி என் அம்மா எவ்வளவு கிரையம் பெற்றார் என்றால் ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட், சர்வே எண்.158/1–ல் கிரையம் பெற்றார். என் தாயாருக்கு கிரையம் கொடுத்த அலமேலு 07.07.1971–ல் வா.சா.ஆ.3–ன் படி ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை கொதவை வைத்துள்ளார் என்றால் சரிதான். எங்களுடைய பத்திரத்தில் மேற்படி கொதவை நீக்கி கிரையம் செய்ததாகத்தான் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய வா.சா.ஆ.4 ஆவணமான கிரைய பத்திரத்தில் சரியான சக்குபந்தி போட்டு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சக்குபந்தியில் உள்ளது படி ராமாயம்மாள் பாக நிலத்திற்கும் கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ராமாயம்மாள் தான் வாதிக்கு வா.சா.ஆ.5–ன் படி ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்றால் சரிதான், அதில் சக்குபந்தி குறிப்பிடாமல் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். செட்டில்மெண்ட் பத்திரத்தில் 25.02.1971–ல் பாகப்பிரிவினை பத்திரத்தின்படி எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் பாகப்பிரிவினையில் பிரிவினை பாதி என்று தவறாக குறிப்பிட்டும், சக்குபந்தியும் குறிப்பிடமாலும் எழுதியுள்ளார்கள். வா.சா.ஆ.2 பாகப் பத்திரத்தில் ராமாயம்மாள் சர்வே எண்.158/1–ல் பொதுவில் பாதி ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் உள்ள D ஷெட்யூல்தான் அலமேலுவிற்கு மொத்தம் 3 ஏக்கர் 15 செண்டில் பொதுவில் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் பாகமாக பிரிந்துள்ளது என்றால் சரிதான். அலமேலுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கும் சக்குபந்தி குறிப்பிடப்படவில்லை என்றால் சாட்சி பத்திரத்தை படித்து பார்த்து சக்குபந்தி குறிப்பிடப்படவில்லை என்று கூறுகிறார். ஆக சொத்தானது பாகப்பிரிவினையின் படி ராமாயம்மாளுக்கும், அலமேலுவிற்கும் பொதுவில் தலா 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் தான் வருகிறது என்றால் சரிதான். என் தாயார் கிரையம் செய்யும்போதுதான் சக்குபந்தி போட்டு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 1971–ல் கொதவை வைக்கும்போது சக்குபந்தி குறிப்பிடவில்லை என்றாலும் ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கொதவை நீக்கிதான் என் தாயார் ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்திற்கு சக்குபந்தி போட்டு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெறும்

போது கிரைய சொத்தை தெளிவாக பெறவேண்டும் என்று சக்குபந்தி போட்டு வாங்கி கொண்டடோம். அவ்வாறு சக்குபந்தி போட்டு கிரையம் வாங்கியது ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம்தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். என்னுடைய கிரைய பத்திர தேதியிலிருந்து 19.02.1973 நான்கு மாதம் கழித்து ஒரு சம்மத பத்திரம் கொடுத்தாக ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அலமேலுவிற்கு பிரிந்த 21 1/2 செண்ட் நிலத்திற்கு ஒரு சம்மதப் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி சம்மதப்பத்திரத்தில் என் தாயாரும், என் தாயாருக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் அலமேலும் வனவாசியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பாக பத்திரத்தின படி ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம்தான் அலமேலுவிற்கு பாத்தியம் என்றாலும் பாக பத்திரத்திற்கு மேல் ஒரு செண்ட் நிலம் கூட அலமேலுவிற்கு பாகம் இல்லை என்றாலும் சரிதான். மீதி ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் ராமாயம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 பத்திரம் பெருமாள் கவுண்டர் பெயரில் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான், அவர் என் அப்பா ஆவார். மேற்படி ஆவணத்தில் கண்ட அனைவரும் வனவாசியை சேர்ந்தவர்களாக இருக்கும் போது சேலத்தில் பத்திரத்தை தட்டச்சு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் நான், என் அப்பா சேலத்தில் தொழில் செய்ததால் அங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. என் அப்பா சமயத்தில் தொழில் செய்தற்கான ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை விலைக்கு வாங்கியிருக்கும் சூழலில் பி.வா.சா.ஆ–1 ஆவணத்தின் படி 21 1/2 செண்ட் நிலத்தை எந்தவிதமான பணமும் இல்லாமல் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவர்களுக்கு பிரிந்த சொத்தை மொத்தமாக பேசி வாங்கி கொண்டோம். மேற்படி அலமேலு ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை என்னிடம் கிரையம் கொடுத்த பிறகு மீண்டும் ஒரு 21 1/2 செண்ட் நிலத்தை எங்களுக்க சம்மதப்பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்மதப்பத்திரம் வழக்கிற்காக வழக்கிற்கு பின்னிட்டு எங்களால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் இந்த சொத்து விவரத்தில் 21 1/2 செண்ட் நிலத்தை எந்த பக்கம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், அதில் அவருக்கு சொந்தமான இணை நிலத்தை அவருடைய அனுபவத்தில் இருந்ததை சம்மதப்பத்திரத்தில் எழுதிக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.2 ஆவணம் நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கின் பிராது நகல் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ–1 ஆவணத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.மேற்படி பி.வா.சா.ஆ.2 பிராது நகலிலும் அலமேலு அம்மாள் எனக்கு சம்மதப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் உள்ள

கையெழுத்து அலமேலுவின் கையொப்பம் இல்லை என்றாலும் அந்த ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் மேற்சொன்ன காரணத்தினால்தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. செல்லம் பஞ்சநாதத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரத்தில் நிலவளமேம்பாட்டு திட்டத்தின் கீழ் என் பெயரிலும், என் தாயார் பெயரிலும் பட்டா இருந்தது என்று கூறியுள்ளேன், அதற்கான பட்டாவை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணங்களும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என் அம்மாவிற்கு நான், என் தம்பி பொன்னுவேல், இரண்டு மகள்கள் வாரிசுகள் ஆவார்கள். பெண் மக்கள் இருந்தததாகவும், பெண் மக்களுக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்கள்.158/1 சி மற்றும் 158/1 டி நிலங்கள் ஒதுக்கப்பட்டதற்கான ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதி பொன்னுவேலுவிற்கு நிலம் ஒப்படைவு செய்யப்பட்டது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பெரிய கேட் தான் தாவா இடத்தில் உள்ள கேட்டாகும். <u>புகைப்படங்கள் இரண்டும் வா.சா.ஆ.14 ஆகும்.</u> சர்வே எண்.158/1 சியில் தென்வடலாக ஒரு தார்ரோடு செல்கிறது என்றால் சரிதான். அதை நான் தான் போட்டுள்ளேன். மேற்படி சர்வே எண்.158/1 சியில் தார் ரோட்டை ஒட்டி கம்பி வேலி போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கம்பிவேலியில் உள்ள மெயின் கேட் என்றால் சரிதான். பெரிய கேட் வழியாக சென்றால்தான் வாதி நிலத்திற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல, வாதி நிலத்திற்கு சிறிய கேட் உள்ளது. புகைப்படத்தில் உள்ள மூன்று நபர்கள் வாதியிடம் வேலை பார்க்கும் நபர்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி பெரிய கேட் பூட்டப்பட்டுள்ளது. பெரிய கேட்டை பூட்டி விட்டால் வாதி நிலத்திற்கு செல்லமுடியாது என்றால் சின்ன கேட் வழியாக செல்லலாம். சின்ன கேட் வழியாக வண்டிகள் செல்லமுடியாது என்றால் சரிதான். நான் சொன்ன சின்ன கேட் என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.4 புகைப்படத்தில் உள்ளது என்றால் சரிதான். அதை ஒட்டி அப்பு முதலியார் சமாதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி சின்ன கேட் சர்வே எண்.158/1 சி நிலத்தில் இல்லை என்றால் சரிதான் சர்வே எண்.158/1 பியில் உள்ளது. கம்பி வேலி 2018–ல் போடப்பட்டது என்றால் சரியல்ல 2015–ல் போட்டேன். அதற்கான ஆவணத்தை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பெரிய கேட் 2018–ல்தான் போட்டேன் என்றால் இல்லை வேலி போடும்போதே 2015–ல் பெரிய கேட் போட்டேன். இந்த வழக்கில் இடைக்கால தடை கேட்ட பின்புதான் சின்ன கேட்டை போட்டேன் என்றால பெரிய கேட் போடும் போதே சின்ன கேட்டை போட்டுவிட்டேன். வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஆணையாளர் இரண்டு முறை தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். இரண்டாவது முறை வந்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும் போது வாதிக்கு சொந்தமான 21 1/2 செண்ட் நிலத்தை நாங்கள் அனுபவம் செய்து வருவதாக அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் தவறாகும். எங்கள் பத்திரத்தை ஆணையர் பார்க்கவில்லை. இன்று வரை மேற்படி அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த இரண்டு தேர்தல்களிலும் வாதியின் மகன் பஞ்சாயத்து தலைவராக இல்லை என்றால் சரிதான். 2020–ல் வழக்கு தாக்கல் செய்யும் வரை எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.158/1ஏ நிலத்தில் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் தொட்டி கட்டினார் என்றால் சரிதான். அந்த தொட்டிக்கு செல்லும் பைப் லைன் சமாதி வழியாக செல்கிறது என்றால் இல்லை சின்ன கேட் வழியாக செல்கிறது. மேற்படி பைப்பை பதிக்கும் போது ஜே.சி.பி வைத்து பதித்தார்கள் என்றால் சரிதான். பில்டிங் கட்டி முடிக்கும் வரை அந்த பெரிய கேட்டின் வழியாகத்தான் டிராக்கடரில் வந்தது என்றால் என் அனுமதியின் பேரில்தான் கொண்டு வந்தார்கள். நான் சொல்வது போல டிராக்டரில் வரவில்லை என்றால் டிப்பர் லாரியில் வந்தது என்றால் டிராக்டர் டிப்பரில்தான் வந்தது. அவ்வளவு வேலை செய்தும் எங்களிடம் 40 வருட மரங்களை வெட்ட என்னிடம் அனுமதி கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**<u>(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)</u>**

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.